# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 17/2014** **நாள் : 11/08/2014**

**பெறுநர்**
மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
அனைத்து செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் முன்னனி ஊழியர்களுக்கு ஒரு நாள் வகுப்பு நடத்துவது என எடுக்கப்பட்ட முடிவின்படி இரண்டாம் கட்டமாக மதுரை, கோவை, திருச்சி, வேலூர் ஆகிய 4 மையங்களிலும் 9.8.2014 அன்று வெற்றிகரமாக வகுப்புகள் நடைபெற்று முடிந்துள்ளது.

இரண்டு கட்ட வகுப்புகளிலும் கோவையில் நடைபெற்ற வகுப்பில் தான் அதிகமான தோழர்கள் கலந்து கொண்டுள்ளனர். கோவையில் கலந்து கொண்டவர்களில் பத்துக்கும் மேற்பட்டோர் பெண்கள் என்பது பாராட்டுக்குரிய ஒன்று. 9.8.2014 அன்று நடைபெற்ற ஒவ்வொரு மையங்களிலும் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இரண்டு கட்டங்களிலும் வகுப்பு நடத்தாத விழுப்புரம் மண்டலம் உடனடியாக வகுப்புக்கு திட்டமிட்டு நடத்திட வேண்டியுள்ளது. இரு கட்ட வகுப்புகளும் வெற்றிகரமாக நடைபெற்றது என்பது மின் ஊழியர் மத்திய அமைப்பின் விரிவாக்கத்திற்கு உதவும் என்று நம்புகின்றோம். இவை போன்ற வகுப்புகள் குறுகிய கால இடைவெளியில் தொடர்ந்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## 20.8.2014 ஆர்ப்பாட்டம்

மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் மின் வாரிய ஊழியர்களின் தேங்கியுள்ள பிரச்சனைகளின் மீது வாரியத்தின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் வரும் 20.8.2014 அன்று திட்டமட்டத்தில் மாலை நேர ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்திட வேண்டுகிறோம். ஆர்ப்பாட்டத்திற்கு முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் அடங்கிய போஸ்டர் ஒன்று மாநில மையத்திலிருந்து வெகுசீக்கிரத்தில் அனுப்பி வைக்கப்படும். அவைகளைப் பயன்படுத்தி விரிவான பிரச்சாரத்தை கொண்டு சென்று ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக்கிட வேண்டுகிறோம்.

ஆர்ப்பாட்டத்திற்கு முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் ஒன்றான மஸ்தூரில் இருந்து கள உதவியாளராக பதவி உயர்வு வழங்குவது. கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையிலிருந்து கணக்கீட்டாளராக பதவி உயர்வு வழங்குவது போன்றவைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் அவை முற்றுப்பெறாத நிலையில் நமது ஆர்ப்பாட்டத்தை திட்டமிட்டவாறு வெற்றிகரமாக நடத்திட வேண்டுகிறோம்.

9.1.2014 அன்று செய்து கொண்ட பணிப் பங்கீடு சம்மந்தமான ஒப்பந்தத்தின் அடிப்படையில் பதவிகளை அனுமதிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இதற்கிடையில் களப்பிரிவில் முகவர் முதல் நிலையாக இருப்பவர்கள் மாதந்தோறும் பணி ஓய்வு பெற்றுச் செல்லும் நிலையில் உள்ளதால் புதிய பணிப் பங்கீடு ஒப்பந்தத்தின் அடிப்படையில் சிறப்பு நிலை முகவர் பதவியையாவது உடனடியாக அனுமதித்திட வேண்டும் என்ற நமது வேண்டுகோளின் அடிப்படையில் கிராமப்புறங்கள், கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி உப கோட்டங்களுக்கான 459 சிறப்பு நிலை முகவர் பதவிகள் அனுமதிக்கப்பட்டு அதற்கான உத்தரவுகளும் வெளியிடப்பட்டுள்ளன. பதவிகளை அனுமதித்ததில் குறைகள் ஏதும் இருந்தால் அதை முறையாக சுட்டிக்காட்டினால் பணிப் பங்கீடு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இதர புதிய பதவிகளை அனுமதிக்கும் போது அந்த குறைகளும் சரி செய்யப்படும் என வாரியம் வாக்குறுதி அளித்துள்ளது.

கணக்கீட்டு பிரிவில் பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்குகின்ற வகையில் கணக்கீட்டு அலுவலர், முதன்மை கணக்கீட்டு அலுவலர், தலைமை கணக்கீட்டு அலுவலர் போன்ற பதவிகளை உருவாக்குவது. கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் அனைத்து பணிகளையும், கணக்கீட்டுப் பிரிவு அதிகாரிகளே நிர்ணயிக்கும் வகையில் கணக்கீட்டு அதிகாரிகளுக்கு அதிக அதிகாரம் வழங்குவது உள்ளிட்ட கோரிக்கைப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. வெகு சீக்கிரத்தில் வாரிய அதிகாரிகளிடம் வழங்கப்பட்டு, அது சம்மந்தமாக தொடர்ச்சியாக வலியுறுத்தி மாற்றங்களை உருவாக்கிட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏற்கனவே திட்டமிட்டவாறு மின்துறை பொறியாளர் அமைப்பின் சென்னை ஆர்ப்பாட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. பங்கு கொண்ட அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

அகில இந்திய சிஐடியு - வின் செயற்குழு கூட்ட முடிவுகளை விளக்குகின்ற கூட்டங்கள் மாவட்ட சிஐடியு முன் முயற்சி எடுத்து நடத்திட உள்ளது. அக் கூட்டங்களில் மத்திய அமைப்பைச் சார்ந்தவர்கள் அதிக அளவில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

(signature)

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

- 20.08.2014 அன்று நடைபெற உள்ள இயக்கத்திற்கான போஸ்டர் இன்னும் இரண்டு நாட்களில் கிளைகளுக்கு பஸ் பார்சல் மூலமாக அனுப்பப்படும்.
- இதே கோரிக்கைகளை நோட்டீசாக அச்சடித்து இதர கோரிக்கைகளையும் இணைத்து கிளைகள் பயன்படுத்திக் கொள்ளவும்

நோட்டீஸ் நகல்

# மின்வாரிய ஊழியர்களின் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

## தமிழக அரசே! மின்வாரியமே!

**நாள்**
**20.08.2014 புதன் கிழமை**
**மாலை 5.05 மணிக்கு**

**இடம்**
**மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்னர்**

- மின்வாரிய பிரிப்பு அமுலாக்கத்தை மறு பரிசீலனை செய்திடுக...!
- நிர்வாக பிரிவு, கணக்கு பிரிவு உள்ளிட்ட காலியிடங்களை , பதவி உயர்வு, உள்முக தேர்வு, நேரடி நியமனம் மூலம் நிரப்பிடுக...!
- 5,000க்கும் மேற்பட்ட மஸ்தூர்களுக்கு கள உதவியாளர் பதவி உயர்வை உடனடியாக வழங்கிடுக...!
- கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையில் உள்ளவர்களுக்கு கணக்கீட்டாளராக பதவி உயர்வு வழங்கிடுக...!
- மின்வாரிய வருவாய் மேம்பட முதன்மை கணக்கீட்டு அலுவலர், தலைமை கணக்கீட்டு அலுவலர் பதவிகளை உருவாக்கிடுக...!
- பணிமாறுதல், பதவி உயர்வு வழங்குவதில் வாரிய விதிமுறைகளை கடைபிடித்திடுக, அரசியல் தலையீட்டை தடுத்திடுக...!
- 9.1.2014 ஒப்பந்தப்படி 2 ஆண்டுகள் பணிமுடித்த கள உதவியாளர்களுக்கு கம்பியாளர் பதவி உயர்வை வழங்கிடுக...!
- 1.4.2003க்கு பிறகு பணியில் சேர்ந்த, ஓய்வு பெற்றோர் உள்ளிட்ட அனைவருக்கும், பழைய ஓய்வூதியத்தையே அமுல்படுத்திடுக...!
- ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளம் கண்டு சட்ட சலுகைகளையும், ரூ.250/- தினக்கூலியையும் வழங்கிடுக...!
- பகுதி நேர பணியாளர்களை புதிய பிரிவுகளுக்கும், காலியாக உள்ள பிரிவுகளுக்கும் அனுமதி வழங்கி நிரப்பிடுக...!

மின்வாரிய ஊழியர்களே கோரிக்கைகள் நிறைவேற
குரல் எழுப்பிடுவோம் வாரீர்!

CITU

## தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

. . . . . . . . . . . . . . . கிளை